செ.வெ.எண்: 513/2016 நாள்: 10.08.2016

# பத்திரிக்கை செய்தி
# “அம்மா திறன் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி திட்டம்”

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தமிழக சட்டமன்றப் பேரவையில் அறிவித்தவாறு “அம்மா திறன் பயிற்சி மற்றும் வேலைவாய்ப்பு திட்டம்” என்ற பயிற்சி திட்டம் மாவட்ட தொழில் மையங்கள் மூலமாக செயல்படுத்துவதற்கான அரசாணைகள் பெறப்பட்டுள்ளன.

குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களில் பணியாளர்கள் கிடைப்பதில் பற்றாக்குறை நிலவுவதால் மேற்படி நிறுவனங்கள் பணியாளர்களுக்குத் தேவையான தொழில் திறன் பயிற்சி கொடுத்து பயிற்சி பெற்ற இளைஞர்களுக்கு தொழில் நிறுவனங்களில் வேலைவாய்ப்பினை ஏற்படுத்தும் வகையில் இந்த திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.

**கன்னியாகுமரி மாவட்டத்தில்**

| | |
|---|---|
| 1. அழகுக்கலை | 7. பொருத்துநர் (பிட்டர்) |
| 2. மரச்சாமான்கள் தயாரித்தல் | 8. மோட்டர் வாகன மெக்கானிக |
| 3. நைலான் மீன் வலை பின்னல் | 9. பிளாஸ்டிக் இன்ஜெக்ஷன் மோல்டிங் மற்றும் ப்ளோ மோல்டிங் |
| 4. உணவுப் பொருள் உற்பத்தி | 10. கணிணி தொடர்பான வேலைகள் |
| 5. கயிறு பொருட்கள் தயாரித்தல | 11. அச்சுத் தொழில் (பிரிண்டிங்) |
| 6. கடைசல் (டர்ணர்) | 12. ஆயத்த ஆடைகள் மற்றும் தையல் தொழில் |

போன்ற தொழில் இனங்களில் 6 மாத கால பயிற்சி வழங்கி, பயிற்சி நிறைவு பெற்றதும், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களில் பணியமர்த்தப்படும் விதத்தில் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

பயிற்சிக் காலத்தில் பயிற்சி பெறும் நபர்களுக்கு தமிழக அரசு பயிற்சி உதவித் தொகையாக மாதம் ஒன்றுக்கு தலா ரூ.5000/- வழங்கப்படும்.

எனவே, ஆர்வமுள்ள ஆண், பெண் இருபாலரும் தங்களது பிறந்த தேதி, வயது, கல்வித்தகுதி, ஜாதிச்சான்று, ஆதார் அட்டை மற்றும் குடும்ப அட்டை ஆகிய நகல்களுடன் பொது மேலாளர், மாவட்டத் தொழில் மையம், தொழிற்பேட்டை, கோணம், நாகர்கோவில்-629 004 அவர்களுக்கு 16.08.2016 தேதிக்குள் வேண்டுகோள் கடிதத்தினை சமர்ப்பிக்குமாறு கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவிக்கிறார்கள்.

**பொது மேலாளர்**
**மாவட்ட தொழில் மையம்**
**கன்னியாகுமரி**

**மாவட்ட ஆட்சித்தலைவர்**
**கன்னியாகுமரி மாவட்டம்**
**நாகர்கோவில் - 1**

---

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.**